www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V11Eco

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 11
பொருளியியல்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

I. பொருத்தமான விடையினை தெரிவு செய்க. 20x1=20

1) கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?
அ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 25% அதிகரித்துள்ளது.
ஆ) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைபெற்றுள்ளது.
இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.
ஈ) கடந்த ஆண்டு பொது விலை 4% அதிகரித்துள்ளது.

2) எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?
அ) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
ஆ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை
இ) பொருளாதாரம் என்பது பருப் பொருள் நலம் சார்ந்த படிப்பு
ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும் வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது

3) கீழ்க்கண்ட விதியை தேவைவிதி அடிப்படையாகக் கொண்டுள்ளது.
அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆ) அளிப்பு விதி
இ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி ஈ) காஸன் விதி

4) சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்
இ) வார்த்தைப்படுத்துதல் ஈ) எதுவுமில்லை

5) சம உற்பத்திக் கோட்டின் வேறு பெயர்
அ) நெகிழ்ச்சியற்ற அளிப்பு கோடு ஆ) நெகிழ்ச்சியற்ற தேவைக்கோடு
இ) சம - இறுநிலைபயன்பாடு ஈ) சமஉற்பத்தி வளைகோடு

6) காப் - டக்ளஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாக கொண்டது?
அ) வளர்ந்து செல்விகித விளைவு விதி ஆ) குறைந்து செல்விகித விளைவு விதி
இ) மாறா விகித விளைவு விதி ஈ) மேற்காணும் அனைத்தும்

7) ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு
அ) மாறும் செலவு ஆ) மாறாச் செலவு
இ) இறுதிநிலைச் செலவு ஈ) மொத்தச் செலவு

8) மொத்த மாறாச் செலவு 100. மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.
அ) 125 ஆ) 175 இ) 225 ஈ) 325

9) விலையின் மற்றொரு பெயர்
அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலைவருவாய்
இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

10) எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?
அ) நிறைவு போட்டி ஆ) முற்றுரிமை
இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை

11) பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு
இ) கூலிக்கோட்பாடு ஈ) வட்டிக்கோட்பாடு

12) எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.
அ) பரிமாற்ற நோக்கம் ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம்
இ) ஊக நோக்கம் ஈ) தனிப்பட்ட நோக்கம்

13) வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்
அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து

14) திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துகள் குறிப்பாகக் கூறுவது.
அ) செல்வம் ஆ) வறுமை சமூதாயத்தின் சாபம்
இ) வேளாண்மை ஈ) மேற்காண் அனைத்தும்

15) 1956 ன் தொழிற் கொள்கையின் நோக்கம்
அ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது
ஆ) வேளாண்துறையை மட்டும் முன்னேற்றுவது
இ) தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது
ஈ) குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றவது

16) திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1950 ஆ) 1955 இ) 1960 ஈ) 1952

17) தொழில் உடைமையை பொதுத் துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றுவது ......... எனப்படும்.
அ) உலக மயமாக்கல் ஆ) தாராளமயமாக்கல்
இ) தனியார் மயமாக்கல் ஈ) தேசியமயமாக்கல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


18) குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலை வாய்ப்புப் பெறுவதை எப்படிக் கருதுவது?
அ) திறந்த வேலை வாய்ப்பு ஆ) மறைமுக வேலை வாயப்பு
இ) பருவகால வேலைவாய்ப்பு ஈ) ஊரக வேலை வாய்ப்பு

19) எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்
அ) இரண்டு ஆ) நான்கு இ) ஆறு ஈ) எட்டு

20) (y - y1) = M(x - x1) என்பது ...... குறிக்கும்.
அ) சாய்வை ஆ) நேர்கோட்டை இ) மாறிலியை ஈ) வளைகோட்டை

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாவிற்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7×2=14

21) பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
22) நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகு முறைகளை குறிப்பிடுக.
23) சம உற்பத்திச் செலவுக்கோடு என்றால் என்ன?
24) உண்மைச் செலவு என்றால் என்ன?
25) விலைபேதம் காட்டும் இரண்டு தன்மைகளை கூறுக.
26) நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
27) இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக் கூறு.
28) முதலீட்டை திரும்பப் பெறுதல் வரையறு.
29) ஊரக பொருளாதாரம் - வரையறு.
30) மொத்தமாநில உள்நாட்டு உற்பத்தி வரையறு

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாவிற்கு ஒரு பத்தி அளவில் விடையளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7×3=21

31) பொருளாதாரத்தைப் பற்றி இலயனல் ராபிசின் இலக்கணத்தை ஆராய்க.
32) தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கத்தை வேறுபடுத்துக.
33) மொத்த, சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விவரி.
34) வெளியுறுச் செலவையும், உள்ளார்ந்த செலவையும் வேறுபடுத்துக.
35) இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை?
36) பொருளாதார முன்னேற்றம் – வரையறு.
37) 1991 ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையின் ஏதேனும் மூன்று நோக்கங்களைக் குறிப்பிடுக.
38) வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை பற்றி குறிப்பு வரைக.
39) TC = 2.5q3 - 13q2 + 50q +12 என்றால் இறுதிநிலைசெலவுச் சார்பு, சாரசரி செலவுச்சார்பு ஆகியவற்றைக் காண்.
40) சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் செயல் திறனை விளக்குக.

## பகுதி - ஈ

**IV. ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.** 7×5=35

41) பொருளாதாரத்தின் தன்மைகளை மற்றும் எல்லைகளை விவாதிக்கவும்?
**(அல்லது)**
சமஇறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.

42) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.
**(அல்லது)**
மொத்தச் செலவு TC = 10 + $Q^3$, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி

43) முற்றுரிமையில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன?
**(அல்லது)**
கடன் நிதி வட்டிக்கோட்பாட்டினை விவரி?

44) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.
**(அல்லது)**
வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.

45) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.
**(அல்லது)**
ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி.

46) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.
**(அல்லது)**
பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

47) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.
**(அல்லது)**
மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.

- - - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com